1973 ஏப்ரல் 5]

திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஆண்டு மழைகாலத்தின் போதும் இந்த இசா ஏரியின் எதிர்முனையில் உள்ள தொளவேடு கிராமம் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இந்த ஆண்டே இதனை எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது உள்ளூர் அதிகாரிகளின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தலைமைப் பொறியாளரின் கவனத்திற்கு வந்தபிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளுக்குத் தடுப்புச்சுவர்

**635 வினா—திரு. கா. வேழவேந்தன் :* மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் அரிப்பைத் தடுக்க கரைத் தடுப்புச்சுவர் (Revetment) அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு ரூ. 1,05,000-க்கு ஒரு மதிப்பீடு பொதுப்பணித்துறை அலுவலரால் தயாரிக்கப்பட்டு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதலுக்கும், நிதி ஒதுக்கவும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரது பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : என்னுடைய சொந்தக் கிராமமாகிய காரணி கிராமம் ஆரணியாற்றின் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்று இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவரின் பதில் கிடைத்தவுடன் நிறைவேற்றி வைக்கப்படும்.

வெற்றிலை சாகுபடி

***636 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது எத்தனை ஏக்கர் நிலத்தில் வெற்றிலை சாகுபடி எவ்வளவு செய்யப்படுகிறது, மாவட்டவாரியாக ?